


# ஸ்ரீ சாளக்ராமம்








நூலாசிரியர்


ந்யாயவேதாந்த வித்யாநிதி, ராமாநுஜஸேவாஸ்ரீ
ஸ்ரீ.உ.வே. காடந்தேத்தி திருச்சேறை முனைவர் ஆஸூரி இராமாச்சார்யார்


ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீரங்கராமாநுஜமஹாதேஸிகன்
91வது திருநக்ஷத்திரம் வெளியீடு


விஶ்வாவஸு வருஷம் வைகாசி திருவாதிரை 29-05-2025





दान पात्र






दान पत्र







श्रीराधाकृष्ण साधना मन्दिर

**॥ श्रीः ॥**

**ஶ்ரீமதே ஶ்ரீவராஹ மஹாதேஶிகாய நம:**



**ஶ்ரீமத் வேதாந்த ராமாநுஜ யதிக்ருபயா ரங்கிணி ந்யஸ்தபாரம்**
**தத்ஸம்ப்ராப்தாகமாந்த த்விதயமனுகணம் ஶிஷ்டதாபூர்ணமக்ர்யம் ।**
**ஶ்ரேஷ்ட ஶ்ரீரங்கராமாநுஜமுநிகருணாலப்த மோக்ஷாஶ்ரமம் தம்**
**ஸத்வஸ்த்தம் ஶ்ரீ வராஹம் யதிவரமநகம் தேஶிகம் ஸம்ஶ்ரயாமி ॥**

---


ந்யாய வேதாந்த வித்யாநிதி ஶ்ரீ உ.வே. காடந்தேத்தி திருச்சேறை,
**முனைவர் ஆஸூரி. இராமாச்சாரியார்**
நியாயசிரோமணி, எம்.ஏ.ஆசார்யா, எம்.பில்., பிஹெச்.டி
Cell: 94866 45951

ஶ்ரீவிஶ்வாவஸூ வருஷம் வைகாசி திருவாதிரை 29.05.2025

---

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | ஸ்ரீ சாளக்ராமம் |
| நூலாசிரியர் | : | முனைவர். வீ. இராமன், |
| மொழி | : | தமிழ், ஸமஸ்கிருதம் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | 29.05.2025 |
| பக்கங்கள் | : | 40 |



ஸ்ரீமத் ஸ்ரீரங்கராமாநுஜ மஹாதேஶிகன்
ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன்
(வைகாசி திருவாதிரை)

**வேதாந்தலக்ஷ்மண முநீந்த்ர க்ருபாத்தபோதம்।**
**தத்பாதயுக்ம ஸரஸீருஹ ப்ருங்கராஜம்।**
**த்ரையந்தயுக்ம க்ருதபூரி பரிஶ்ரமம்தம்।**
**ஸ்ரீரங்கலக்ஷ்மணமுநிம் ஶரணம் ப்ரபத்யே॥**

IIஸ்ரீ:II

ஸ்ரீமதே ஸ்ரீவராஹமஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீரங்கராமாநுஜ மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாச ராமாநுஜ மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீவேதாந்த ராமாநுஜ மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாச மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே பகவதே பாஷ்யகாராய மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே வகுளபூஷண மஹாதேசிகாய நம:
ஸ்ரீ ரங்கநாயிகா சமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

Srimathe SriVaraha Mahadesikaya Nama:
Srimathe SriRangaramanuja Mahadesikaya Nama:
Srimathe Srinivasa Ramanuja Mahadesikaya Nama:
Srimathe SriVedantha Ramanuja Mahadesikaya Nama:
Srimathe Srinivasa Mahadesikaya Nama:
Srimathe Nigamantha Mahadesikaya Nama:
Srimathe Bhagavate Bhashyakaraya Mahadesikaya Nama:
Srimathe Vagulabooshana Mahadesikaya Nama:
Sri Ranganayika Sametha Sri Ranganatha Parabhramane Nama:
Sri Ranganatha Divyamani Padukabhyam Nama:

SRIRANGAM SRIMATH ANDAVAN ASHRAMAM
HQ: Melur Road, Srirangam, Tiruchirapalli, Tamil Nadu

New No. 33, Old No. 23, Desikachari Road,
Mylapore, Chennai 600 004 044 – 2499 3658



## ஸ்ரீமுகம்

தாயாய்வந்த பேயுயிரும் தயிரும்இழுதும் உடனுண்ட
வாயான்* தூயஅரியுருவில் குறளாய்ச்சென்று மாவலியை
ஏயானிரப்ப* மூவடிமண் இன்றேதாவென்று உலகேழும்
தாயான்* காயாமலர்வண்ணன் சாளக்கிராமம்
அடைநெஞ்சே!

பெரிய திருமொழியில் கலியன் **கலையும் கரியும்** என்ற பதிகத்தில் சாளக்கிராமத்து எம்பெருமானைப்

பற்றி பத்து பாசுரங்களில் மங்களாஶாஸனம் செய்கிறார். அதில் இயற்கை வர்ணனைகளும், வாமன, ஸ்ரீராம, ஸ்ரீக்ருஷ்ண அவதார வைபவங்களையும், வட நாட்டு திவ்யதேஶங்களை அநுபவிக்கும் ஸந்தர்பத்தில் தென்னாட்டில் அமைந்துள்ள திருஊரகம், திருக்குடந்தை, திருப்பேர்நகர் போன்ற திவ்யதேஶத்து எம்பெருமான் களையும் நினைவில் கொண்டு இவர்களெல்லோரும் சாளக்ராமத்தில் வாஸம் செய்கிறார்கள் என்று சொல்லி விபவமும் அர்ச்சையும் சேர்ந்து ஸேவை ஸாதிக்கக் கூடிய **சாளக்கிராமம் அடை நெஞ்சே** என்று அநுபவிக் கிறார். அப்படிப்பட்ட சாளக்கிராம க்ஷேத்ரத்தைப் பற்றி **ஸ்ரீசாளக்ராமம்** என்ற தலைப்பில் ஒரு நூலை வடிவமைத்து வெளியிட்டுள்ள ஆஶ்ரமத்து ஶிஷ்யர் திருச்சேறை ஆஸூரி இராமாச்சாரியாருக்கு இது போன்ற கைங்கர்யம் மேலும் மேலும் வளரவேண்டும் என்று ஸ்ரீரங்கம் திவ்யதம்பதிகளின் திருவடிகளிலும், பூர்வாசார்ய பாதுகைகளிடத்திலும் ப்ரார்த்தித்துக் கொள்கிறேன்.

நாராயண! நாராயண! நாராயண!

# பொருளடக்கம்

அடியேன் செய்யும் விண்ணப்பம்

1. முக்திநாத்
2. ஶ்ரீவராஹபுராணத்தில் சாளக்ராம மூர்த்தி
3. நன்மை தீமை பலன்கள்
4. மூர்த்தி லக்ஷணம்
5. சாளக்ராம மூர்த்தி வக்த்ர பலன்கள்
6. தஶாவதார மூர்த்திகள்
7. ஶாளக்ராம தீர்த்தம்
8. புனிதமான இடம் எது?
9. சாளக்ராம க்ஷேத்ரத்தில் ஸ்வாமி தேஶிகன்

# அடியேன் செய்யும் விண்ணப்பம்

பகவானுடைய ஸ்ருஷ்டியில் பலவிதமான உயிரினங்கள், மனுஷ்ய, தேவ, திர்யக், ஸ்தாவர ஜங்கமங்கள் அடங்கியுள்ளன. புண்ணிய பாவ கர்ம வாஸனைகளால் பல ஜன்மங்கள் ஏற்பட்டாலும் அவைகளில் மனுஷ்ய ஜன்மமானது மிகவும் அரிது. அதிலும் ப்ராஹ்மண ஜன்மம் மிகவும் அரிது. அதிலும் ஸ்ரீவைஷ்ணவ ஜன்மமானது மிக மிக அரிது. **यतो वा इमानि भूतानि जायन्ते** (**யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே**) என்ற வேத வாக்யத்தின்படி எல்லா ஜீவன் களும் எங்கிருந்து வந்தனவோ அங்கேயே லயம் அடை கின்றன. ஆனால் அங்கே செல்வதற்கு மிகவும் முயற்சி செய்யவேண்டும். ஸ்ரீமந்நாராயணனிடத் திலிருந்து தோன்றியவைகளை மறுபடியும் அங்கேயே அடையும்படியான வழியையும் **यज्ञेन दानेन तपसाऽनाशकेन** (**யஜ்ஞேந தாநேந தபஸாऽநாஶகேந**) என்று வேதமே காண்பிக்கிறது. யாகத்தினாலும், தானத்தி னாலும், தவம் செய்தும், உபவாஸம் (பட்டினி) இருந்தும் அவனை அடையவேண்டும். அப்படிப்

பட்டவர்கள் **बहूनां जन्मनामन्ते ज्ञानवान् मां प्रपद्यते** (**பஹூநாம் ஜந்மநாமந்தே ஞானவாந் மாம் ப்ரபத்யதே**) என்று பலபிறவிகளின் கடைசியில் என்னை அடைகிறார்கள் என்று ஸ்ரீகிருஷ்ணன் கூறுகிறார். ஆனால் இந்த கலியுகத்தில் யாகம் முதலானவைகள் செய்வது என்பது மிகவும் கஷ்டம் என்பதால் விஷ்ணுவை ஆராதித்து அடைவது என்பது ஸுலபமான வழி என்று ஶாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

**विष्णुपादोदकं नित्यं शिरसा धारयेत् पिबेत्।**
**अग्निष्टोमसहस्रस्य वाजपेय शतस्य च।**
**यत् पुण्यं लभते नित्यं विष्णो: नैवेद्य भक्षणात्॥**

விஷ்ணுபாதோதகம் நித்யம் ஶிரஸா தாரயேத் பிபேத்।
அக்நிஷ்டோமஸஹஸ்ரஸ்ய வாஜபேய ஶதஸ்ய ச।
யத் புண்யம் லபதே நித்யம் விஷ்ணோ: நைவேத்ய பக்ஷணாத்॥

ஆயிரம் அக்நிஷ்டோம யாகமும், நூறு வாஜபேய யாகமும் செய்தால் என்ன புண்ணியம் கிடைக்குமோ அந்த பலன் விஷ்ணுவை ஆராதித்து அந்த தீர்த்தத்தைப் பருகினால் கிடைக்கும். அப்படிப்பட்ட விஷ்ணுவை விக்ரஹ ப்ரதிஷ்டை செய்து ஆராதிப்பது என்பது எல்லோராலும் முடியாத காரியம் என்பதால்

எம்பெருமானே **ஶாளக்ராம ஆராதனம்** என்ற சிறந்த வழியைக் காண்பித்திருக்கிறான்.

விக்ரஹ ஆராதனம் செய்யவேண்டுமென்றால் ப்ராணப்ரதிஷ்டை, ஆவாஹனம் முதலியவைகள் செய்யவேண்டும். எல்லோரும் தொட்டு ஆராதிக்க முடியாது. ஸ்பர்ஶ தோஷங்கள் ஏற்படும். அதற்கு ப்ராயஶ்சித்தம் பண்ணவேண்டும். அதுபோன்றதான நியமங்கள் ஶாளக்ராமத்திற்கு கிடையாது. பசும் பாலில் திருமஞ்சனம் செய்தால் போதுமானது.

**न प्रतिष्ठा विधातव्या न चैव आवाहनादिकम्।**
**न आवाहनं न प्रतिष्ठा न शान्तिः नैव निष्कृतिः।**
**दुग्धेन स्नापयेत् ब्रह्मन् स्पर्शाद्यैः दूषिता यदि॥**

ந ப்ரதிஷ்டா விதாதவ்யா ந சைவ ஆவாஹநாதிகம்।
ந ஆவாஹநம் ந ப்ரதிஷ்டா ந ஶாந்தி: நைவ நிஷ்க்ருதி:।
துக்தேந ஸ்நாபயேத் ப்ரஹ்மந் ஸ்பர்ஶாத்யை: தூஷிதா யதி॥

என்று கூறப்பட்டுள்ளது.

**शालग्राम शिला यत्र यत्र द्वारवती शिला।**
**शङ्खं तु तुळसीपत्रं तत्र सन्निहितो हरिः॥**
ஶாலக்ராம ஶிலா யத்ர யத்ர த்வாரவதீ ஶிலா।
ஶங்கம் து துளஸீபத்ரம் தத்ர ஸந்நிஹிதோ ஹரி:॥

ஶாளக்ராம மூர்த்தியும், த்வாரகா ஶிலையும், சங்கும், துளஸிதளமும் இருக்குமிடத்தில் ஸ்ரீஹரியான எம் பெருமான் நித்யவாஸம் செய்கிறார். ஸ்ரீமூர்த்தியும், த்வாரகா ஶிலையும் இருக்குமிடத்தில் ப்ரஹ்மஹத்தி தோஷமானது **उभयो: सङ्गमो यत्र ब्रह्महत्यां व्यपोहति** (**உபயோ: ஸங்கமோ யத்ர ப்ரஹ்மஹத்யாம் வ்யபோஹதி**) என்றபடி போக்கடிக்கப்படுகிறது. ஶாளக்ராம ஆராதனம் செய்வதால் **शालग्राम आराधनेन सर्वपाप विमोचनं मुक्तिंच लभते नर:** (**ஶாலக்ராம ஆராதநேந ஸர்வபாப விமோசநம் முக்திஞ்ச லபதே நர:)** எல்லா பாவங்களிலிருந்து விடுதலையும் மோக்ஷமும் அடைகிறான்.

**श्रिय:पति**யான ஸ்ரீமந்நாராயணனே ஸர்வஜகத் காரணபூதன் என்பது ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தம். ஸ்ரீமத் ராமாயணத்தில் வால்மீகி பகவானும் **जगत् सर्वं शरीरं ते** (**ஜகத் ஸர்வம் ஶரீரம் தே**) என்று ஸ்ரீராமபிரானை குறிப்பிடுகிறார். இந்த உலகமானது (ப்ரபஞ்சம்) எம்பெருமானுடைய ஶரீரம் என்று அர்த்தம். அதனால் ப்ரபஞ்சமே பகவான் என்ற பொருள் கிடைக்கிறது. ப்ரபஞ்சம் என்பது பஞ்சபூதங்களின் சேர்க்கை. அதில்

எம்பெருமான் எப்பொழுதும் **अन्तर्बहिश्च तत्सर्वं** (**அந்தர்பஹிஶ்ச தத்ஸர்வம்**) என்றபடி உள்ளும் புறமுமாக வாஸம் செய்கிறான். இதை **यः पृथिव्यां तिष्ठन् अन्तः प्रविष्ट शास्ता जनानां सर्वात्वा** (**ய: ப்ருதிவ்யாம் திஷ்டந் அந்த: ப்ரவிஶ்ட ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்வா**) என்று வேதமும் ப்ரபஞ்சமே பகவான் என்று கூறுகிறது. பகவான் ஶ்ரீகிருஷ்ணனும்

**मयि सर्वमिदं प्रोक्तं सूत्रे मणिगणा इव।**
**मत्स्थानि सर्वभूतानि।**
**न तदस्ति विना यत्स्यात् मया भूतं चराचरम्॥**

மயி ஸர்வமிதம் ப்ரோக்தம் ஸூத்ரே மணிகணா இவ।
மத்ஸ்தாநி ஸர்வபூதாநி।
ந ததஸ்தி விநா யத்ஸ்யாத் மயா பூதம் சராசரம்॥

எல்லா பொருட்களிலும் பகவான் அந்தராத்மாவாய் இருப்பதால் ப்ரபஞ்சமும் பகவானும் ஒன்று என்று திருமங்கையாழ்வார் பெரியதிருமொழி முதல்பத்தில் **கலையும் கரியும்** ஐந்தாம் திருமொழியில் அநுபவிக்கிறார். நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் **நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடு**

**வானாய்ச் சீரார் சுடர்களிரண்டாய் சிவனாய் அயனானாய்** என்று இந்த ப்ரபஞ்சத்திற்கு காரண மாகவும், இதை தனக்குச் சரீரமாகவுடையவனாகவும், ப்ரபஞ்ச தாரகனாகவுமுடையவன் எம்பெருமான் என்று அநுபவிக்கிறார். அப்படிப்பட்ட எம்பெருமான் நித்யவாஸம் செய்து கொண்டிருக்கும் க்ஷேத்ரமான **சாளக்கிராமம் அடை நெஞ்சே** என்று ஆழ்வார் அருளிச்செய்தபடி அந்த க்ஷேத்ரத்தை ஸ்ரீமதாண்டவன் நெஞ்சாலும் (தமது ஸங்கல்பத்தினாலும்) ஸாக்ஷாத் நேராகவே எழுந்தருளி முக்திநாத் எம்பெருமானை மங்களாஶாஸனம் செய்தாயிற்று. அதில் ஏற்பட்ட அநுபவத்தையும் சாளக்ராம மூர்த்திகளுடைய பெருமைகளையும், மஹிமைகளையும், கண்டகீ நதியினுடைய வைபவங்களையும் எழுதி ஒரு நூலாக வடிவமைத்து ஸ்ரீமதாண்டவன் திருவடித் தாமரைகளில் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் நவதி திருநக்ஷத்திர மஹோத்ஸவத்தில் காணிக்கையாக ஸமர்ப்பிக்கின்றேன்.

**ஆசார்யன் திருவடிகளே ஶரணம்**



# ஸ்ரீ சாளக்ராமம்

ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீவராஹ மஹாதேஶிகன் 21.04.2025 அன்று காலை கண்டகி நதியில் நீராட்டம் கண்டருளி பகவதாராதனம், பாதுகாராதனம், தீர்த்த கோஷ்டி, கத்யத்ரய கோஷ்டி களை முடித்துக் கொண்டு முக்திநாத் என்று சொல்லக்கூடிய சாளக்ராமம் எழுந்தருளி அந்த திவ்ய தேஶத்து எம்பெருமானை மங்களாஶாஸனம் பண்ணியாயிற்று.

## முக்திநாத்

நூற்றெட்டு திவ்யதேஶங்களில் 106வது திவ்யதேஶம் ஸ்ரீசாளக்ராமம். இந்த திவ்யதேஶம் ஸ்வயம் வ்யக்த க்ஷேத்ரங்களான ஸ்ரீரங்கம், திருமலை, ஸ்ரீமுஷ்ணம், வானமாமலை, சாளக்ராமம், பத்ரி, நைமிஶாரண்யம், புஷ்கரம் ஆகிய எட்டு க்ஷேத்ரங்களில் ஒன்று. இங்கு எம்பெருமான் சாளக்ராம மூர்த்தியாக ஸேவை ஸாதிப்பதால் ஸ்ரீ சாளக்ராமம் என்றும் தாமோதர குண்ட் என்றும்

பெயர். இங்கு செல்வதற்கு முன்பாக முக்திநாத் என்ற இடத்தில் எழுந்தருளியிருக்கும் மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடிய முக்திநாதரை ஸேவிக்க வேண்டும்.

இந்த திவ்யதேஶம் நேபாள தேஶத்தின் இமய மலையில் முக்திநாத் பள்ளத்தாக்கில் 3,710 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. இது இந்துக்களும், பௌத்தர்களும் வழிபடக்கூடிய முக்கியமான புண்ணிய ஸ்தலமாக அமைந்துள்ளது. இந்த இடத்திற்கு வந்து செல்ல ஏற்ற காலம் மார்ச் மாதம் முதல் ஜூன் மாதம் வரை. இந்த முக்திநாத் க்ஷேத்ரம் *சாக்த* மதத்திலுள்ள 51 ஶக்தி பீடங்களில் ஒரு ஶக்தி பீடமாகவும் கூறப்படுகிறது. திபெத்திய பௌத்தர்கள் இந்த இடத்தை நூறு புனித நீர் நிலைகள் உள்ள இடமாகப் போற்றுகின்றனர். தாந்த்ரீக திபெத்திய பௌத்தர்கள் இதை *டாகினி* என்ற பெண் தெய்வ வழிபாட்டு ஸ்தலமாக வழிபடுகின்றனர்.

பொதுவாக வாழ்வில் ஒவ்வொரு மனிதனுக்கும் தீர்த்த யாத்திரை, க்ஷேத்ராடனம் என்பது மிகவும் முக்கியமானது. அதனாலேயே ஶ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் அக்ரூரயானம், தீர்த்த யாத்திரை,

திருவேங்கடமுடையான் யாத்திரை என்றெல்லாம் சொல்லி வைத்தார்கள். மஹாபாரதத்தில் யுத்தம் நடக்கும் ஸமயத்தில் ஸ்ரீபலராமன் யாத்திரை சென்றதாக குறிப்பிடப்படுகிறது. ஆழ்வார்களும் ஆசார்யர்களும் யாத்திரைகள் அநுஷ்டித்ததை அவர்கள் சரித்ரம் மூலம் நாம் தெரிந்துகொள்ள முடிகிறது. 108 திவ்யதேஶங்களில் 106 திவ்யதேஶ யாத்திரைகள் நம்மால் செய்ய முடியும் என்றாலும் இரண்டு திவ்ய தேஶங்கள் எம்பெருமான் அநுக்ரஹம் செய்தால் மட்டுமே சென்று வர முடியும். ஒன்று **பத்ரிநாத்** மற்றொன்று **முக்திநாத்**..

**கிளரொளி இளமை கெடுவதன் முன்னம், முற்றமூத்துக்கோள் துணையா முன்னடி நோக்கி வளைந்து** என்று ஆழ்வார்கள் அருளிச்செய்தபடி இளம் வயதிலேயே யாத்திரைகளுக்குச் சென்று வந்து விட வேண்டும். ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் பெரியாஶ்ரம ஆசார்ய பரம்பரையில் அவதரித்து பாரத தேஶத்தில் ஆஸேது ஹிமாசலம் பாதயாத்திரை அநுஷ்டித்து லோகப்ரஸித்தரான **ஸ்ரீமத்திருக்குடந்தை ஆண்டவன் ஸ்ரீவேதாந்த ராமாநுஜ மஹாதேஶிகன்**

திருமங்கையாழ்வார் அருளிச்செய்தபடி **வதரி வணங்குதுமே** என்று பத்ரீநாத் வரை சென்று மங்களாஶாஸனம் செய்திருந்தாலும் **சாளக்கிராம் அடை நெஞ்சே** என்றதில் மனதளவே அந்த க்ஷேத்ரத்திற்கு சென்று வந்தாயிற்று. நமது தேஶிக ஸம்ப்ரதாயத்தில் இதுவரையில் எந்த ஸந்யாஸியும் முக்திநாத் யாத்திரை சென்று வந்ததாகத் தெரியவில்லை. ஸ்ரீமத்திருக்குடந்தை ஆண்டவன் பூர்வாசார்ய பாதுகைகளை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு முக்திநாத் சென்று வரவேண்டுமென் றிருந்த திருவுள்ளத்தை **ப்ரக்ருதம் ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீவராஹ மஹாதேஶிகன்** ஶிஷ்யர்கள் புடைசூழ எழுந்தருளி நிறைவேற்றியபடி. செயற்கரிய செய்வார் பெரியோர் என்றபடி பூர்வாசார்ய பாதுகைகளை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு கண்டகி நதியில் நீராட்டம், அநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, அந்த தீர்த்தத்தினால் பகவதாராதனம், பாதுகா ஆராதனங்களைப் பண்ணி பூர்வாசார்யர்கள் திருவுள்ளம் மகிழும்படியாகவும், எம்பெருமான் திருவுள்ளம் உகக்கும்படியாகவும் அநுஷ்டித்து ஸ்ரீமத்

ஆண்டவன் முக்திநாத் எழுந்தருளியது ஒரு **பாவை நீராட்டம்** அநுஷ்டித்ததுபோல் இருந்தது.

சாளக்ராமம் செல்லும் வழியானது இருபுறமும் அழகான மலைகளும், காடுகளும் மிகவும் ரமணீய மாகவும், மனதிற்கு இனிமை யாகவும் இயற்கை எழிலை ரசித்துக் கொண்டு செல்லும்படியாக அமைந் திருக்கிறது. அடுக்கடுக்கான மலைகளையும் காடு களையும் கடந்து ஆடல்மா குதிரையில் சென்ற திருமங்கையாழ்வார் இராமர் காடுகளைக் கடந்து இலங்கைக்குச் சென்று இராவணனின் தலைபத்து உதிர்த்தவனே சாளக்ராமத்தில் எழுந்தருளியுள்ளான், அந்த **சாளக்ராமம் அடை நெஞ்சே** என்று அநுபவிக்கிறார்—

**கலையும் கரியும் பரிமாவும்**
**திரியும் கானம் கடந்துபோய்**
**சிலையும் களையும் துணையாகச்**
**சென்றான் வென்றி செருக்களத்து**
**மலைகொண்டு அலைநீர் அணைகட்டி**
**மதிள் நீர் இலங்கை வாள் அரக்கர்**
**தலைவன் தலை பத்தறுத்துகந்தான்**
**சாளக்ராமம் அடை நெஞ்சே.**

அப்படிப்பட்ட முக்திநாத் க்ஷேத்ரம் செல்வது மிகவும் கஷ்டம். மலை ப்ரதேஶம் குளிர் அதிகமாக இருக்கும். ஶ்ரீமதாண்டவன் அநுக்ரஹத்தினால் மழையும், மிகுந்த காற்றும், அதிகமான குளிரும் இல்லாமல் இயற்கையின் அரவணைப்பில் **ஶ்ரீமதாண்டவன்** 108 திவ்யதேஶத்து புண்ணியங்கள் ஒன்று சேர்ந்தாப்போல் 108 கோமுகங்களின் வழியாக வரக்கூடிய **தீர்த்தத்தில் நீராட்டம் கண்டருள** அதனை தொடர்ந்து நாங்களும் அதில் நீராடினோம். பிறகு ஶ்ரீமதாண்டவன் ஶ்ரீதேவி நாச்சியார் ஸமேத ஶ்ரீமூர்த்தி எம்பெருமானை மங்களாஶாஸனம் செய்தாயிற்று.

கண்ணபிரான் யஶோதை வியக்கும்படியாக பல கார்யங்களைச் செய்கிறான். அப்படிப்பட்ட கண்ணனை ஆழ்வார் **பாலைக் கறந்து அடுப்பு ஏற வைத்துப், பல் வளையாள் என் மகன் இருப்ப, மேலை அகத்தே நெருப்பு வேண்டிச் சென்று இறைப்பொழுது அங்கே பேசி நின்றேன் சாளக்ராமம் உடைய நம்பி** என்று அநுபவிக்கிறார்.

# ஶ்ரீவராஹபுராணத்தில் சாளக்ராம மூர்த்தி

இந்த திவ்யதேஶத்தில் பாயும் கண்டகி நதியில் சாளக்ராம மூர்த்திகள் உருவாகின்றன. கண்டகி நதி விஷ்ணுவைக் குறித்து தவம் செய்து என் கர்ப்பத்தில் வாஸம் செய்ய வேண்டுமென்று ப்ரார்த்தித்துக் கொள் கிறாள். எம்பெருமானும் நீ நதியாக ஓடிக்கொண்டிரு அதில் சாளக்ராம கல் உருவில் நான் தோன்றுவேன் என்று அநுக்ரஹிக்கிறார். **தான் உகந்த ஊரெல்லாம் தன் தாள்பாடி** என்று ஆழ்வார் அருளிச்செய்தபடி பெருமாள் உகந்து எழுந்தருளியிருக்கும் இடமே திவ்யதேஶம்.

கண்டகி நதியில் சாளக்ராம மூர்த்தி தோன்றுவதற்கு கண்டகீ என்பவளே காரணம் என்று ஶ்ரீவராஹபுராணத்தில் 144வது அத்யாயத்தில் கூறப் பட்டுள்ளது. கண்டகீ என்பவள் விஷ்ணுவைக் குறித்து தவம் செய்கிறாள். அதனால் ஸந்தோஷமடைந்து பகவான் அவள் கண்முன்னே தோன்ற நான் வேண்டும் வரத்தை நீ எனக்கு அருளவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறாள்-

**ततो हिमांशो सा देवी गण्डकी लोकतारिणी।**
**प्राञ्जलि: प्रणता भूत्वा मधुरं वाक्यमब्रवीत्॥ 52॥**

ததோ ஹிமாம்ஶோ ஸா தேவீ கண்டகீ லோகதாரிணீ।
ப்ராஞ்ஜலி: ப்ரணதா பூத்வா மதுரம் வாக்யமப்ரவீத்॥52॥

**यदि देव प्रसन्नोऽसि देयो मे वाञ्छितो वर:।**
**मम गर्भगतो भूत्वा विष्णो मत्पुत्रतां व्रज॥ 53॥**

யதி தேவ ப்ரஸந்நோऽஸி தேயோ மே வாஞ்சிதோ வர:।
மம கர்பகதோ விஷ்ணோ மத்புத்ரதாம் வ்ரஜ॥53॥

ஹே விஷ்ணுவே! நீ என்னிடத்தில் கர்ப்பம் தரித்து எனக்கு புத்ரனாக இருக்கவேண்டுமென்று கேட்கிறாள். பகவானும் கண்டகியைப் பார்த்து உலக மக்கள் ஸம்ஸாரத்திலிருந்து விடுபடுவதற்காகவும், பக்தர்களுடைய அநுக்ரஹத்திற்காகவும் கண்டகீ நதியாக ஓடிக்கொண்டிருக்கும் உன் கர்ப்பத்தில் ஶாளக்ராம கல் உருவில் புத்ரனாக தோன்றுவேன் என்ற வரத்தையும் அளிக்கிறார்—

**दास्यामि याचितं येन लोकानां भवमोचणम्।**
**इत्येवं कृपया देवो निश्चित्य मनसा स्वयम्।**
**गण्डकीमवदत् प्रीत: शृणु देवि वचो मम॥54॥**

தாஸ்யாமி யாசிதம் யேந லோகாநாம் பவமோசணம்।
இத்யேவம் க்ருபயா தேவோ நிஶ்சித்ய மநஸா ஸ்வயம்।
கண்டகீமவதத் ப்ரீத: ஶ்ருணு தேவி வசோ மம॥54॥

**शालग्रामशिलारूपी तव गर्भगत: सदा।**
**स्थास्यामि तव पुत्रत्वे भक्तानुग्रहकारणात्॥55॥**

ஶாலக்ராமஶிலாரூபி தவ கர்பகத: ஸதா।
ஸ்தாஸ்யாமி தவ புத்ரத்வே பக்தாநுக்ரஹகாரணாத்॥55॥

இப்படி அநுக்ரஹம் செய்து, நான் உன்னிடத்தில் நித்யவாஸம் செய்வதால் எல்லா நதிகளைக் காட்டிலும் சிறந்தவளாக நீ விளங்குகிறாய். கண்டகீ நதியான உன்னை பார்த்தாலோ, தொட்டு ஸ்பர்ஶித் தாலோ, ஸ்நானம் செய்தாலோ, பருகினாலோ, மூழ்கி நீராடினாலோ அவர்களுடைய மனது, வாக்கு, உடம்பு இவைகளால் செய்யப்பட்ட எல்லா மஹாபாவங் களையும் நீ போக்கடிக்கிறாய் என்று பலவிதமான வரங்களைக் கொடுத்து மறைந்துவிடுகிறார்.

**சாள** என்கிற சொல்லுக்கு ‘ஸ்தோத்ரம்’ என்று அர்த்தம். **க்ராமம்** என்ற சொல்லிற்கு ‘கூட்டம்’ என்று பொருள். அதனால் நாம் சொல்லும் ஸ்தோத்ரங் களைக் கூட்டமாக எம்பெருமான் ஏற்றுக் கொள்

வதால் சாளக்ராம மூர்த்தி என்று பெயர். அப்படி 12 ஸ்ரீமூர்த்திகள் சேர்ந்திருந்தால் அதற்கு 'க்ஷேத்ரம்' என்று பெயர்.

ஒரு ஸமயம் **சாளங்காயனர்** என்ற முனிவர் கண்டகி நதிக்கரையில் தவம் புரிந்து வந்தார். ஒரு நாள் எம்பெருமான் ப்ரஸன்னமாகி என்ன வேண்டு மென்று கேட்க நான் விரும்பியபடி தோன்ற வேண்டு மென்று கேட்டுக் கொண்டு ஒரு கண்ணால் ஒரு சாள மரத்தையும், மற்றொரு கண்ணால் மலையையும் பார்த்தார். அப்படியே ஆகட்டுமென்று எம்பெருமான் அநுக்ரஹித்தார். முனிவர் பார்த்த சாளமரங்களுக்கும் சாளக்ராம மூர்த்தி உத்பத்திக்கும் ஒரு ஸம்பந்தம் உண்டு. சாளக்ராம மரங்கள் பூமியில் புதையுண்டு பல லக்ஷம் ஆண்டுகள் கழித்து கல்லாக மாறிவிடு கின்றன. அந்த ஸமயத்தில்தான் **வஜ்ரகீடம்** என்ற பூச்சி அந்த கற்களில் துளையிடுகின்றன. அப்படி அவைகள் துளையிடும் வடிவத்திற்கேற்ப தன் உருவை மாற்றிக் கொண்டு அதற்கு ஏற்றாற்போல் அந்தந்த மூர்த்தியாக எம்பெருமான் தோன்றி ஸேவை ஸாதிக்கிறான். இப்படி உருவானவைகளே சாளக்ராம

மூர்த்திகளாகும் என்றும் கூறுவர்கள். அப்படி தாமோதர குண்டத்தில் உருவாகிய மூர்த்திகளே எல்லோருடைய க்ருஹங்களிலும் ஆராத்ய தெய்வ மாக வழிபடுவதை நாம் இன்றும் காணமுடிகிறது.

மைசூர் ராஜதானியை ஆண்டுவந்த ஸ்ரீகிருஷ்ணராஜ மஹாராஜர் எல்லா ஶாஸ்த்ரங் களையும் கற்றறிந்தவர். பண்டிதர்களையும், ப்ராஹ் மணர்களையும் நன்றாக போஷணம் செய்தவர். அவர் 70க்கும் மேற்பட்ட தந்த்ர-ஆகம-இதிஹாஸ-புராண க்ரந்தங்களை நன்றாக படித்து ஆராய்ந்து அதிலுள்ள விஷயங்களைத் தொகுத்து **தத்த்வ நிதி:** என்ற ஒரு நூலை இயற்றியுள்ளார். அந்த நூலில் 1. **ஶக்தி தத்த்வ நிதி: 2. விஷ்ணு தத்த்வ நிதி: 3. ஶிவ தத்த்வ நிதி: 4. ப்ரஹ்ம தத்த்வ நிதி: 5. க்ரஹ தத்த்வ நிதி: 6. வைஷ்ணவ தத்த்வ நிதி: 7. ஶைவ தத்த்வ நிதி: 8. ஆகம தத்த்வ நிதி: 9. கௌதுக தத்த்வ நிதி:** என்று ஒன்பது விஷயங்களை விவரித்துள்ளார். இதில் ஆறாவது தத்த்வ நிதியான விஷ்ணுதத்த்வ நிதியில் ஶாளக்ராம மூர்த்தியின் பெயர்கள், லக்ஷணங்கள், வேறுபாடுகள், அதன் உற்பத்தி, வர்ணம், க்ஷேத்ரம்,

நன்மை, தீமைகள் இவைகளைப் பற்றி நரஸிம்ஹ புராணத்தில் கூறியுள்ளபடி வர்ணிக்கப்பட்டுள்ளது.

ஒரு ஸமயம் சதுர்முக ப்ரஹ்மாவும் நாரதரும் பேசிக்கொள்ளும்போது நாரதபகவான் ப்ரஹ்மாவைப் பார்த்து தங்கள் அநுக்ரஹத்தினால் எல்லாம் தெரிந்திருந் தாலும் ஶாளக்ராம மூர்த்தியைப் பற்றி தற்பொழுது தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். அதனால் அதைப் பற்றி உபதேஶிக்க வேண்டுமென்று கேட்கிறார்—

**देवादिदेव सर्वज्ञ लोकेश कमलासन।**
**त्वत्प्रसादान् मया सर्वं ज्ञातं ज्ञेयं विधेऽधुना॥**

தேவாதிதேவ ஸர்வஜ்ஞ லோகேஶ கமலாஸந।
த்வத்ப்ரஸாதாந் மயா ஸர்வம் ஞாதம் ஞேயம்
விதேऽதுநா॥

**इदानीं श्रोतुमिच्छामि शालग्रामस्य लक्षणम्।**
**तस्योत्पत्तिं निदानं च वर्णं क्षेत्रं फलाफलम्॥**

இதாநீம் ஶ்ரோதுமிச்சாமி ஶாலக்ராமஸ்ய லக்ஷணம்।
தஸ்யோத்பத்திம் நிதாநம் ச வர்ணம் க்ஷேத்ரம்
பலாபலம்॥

**मूर्तिभेदश्च सर्वस्या: शालग्रामशिलातनो:।**
**तथार्चनायां योग्यत्वं त्वद्वाक्येन चतुर्मुख॥**

மூர்த்திபேதஶ்ச ஸர்வஸ்யா: ஶாலக்ராமஶிலாதநோ:।
ததார்சநாயாம் யோக்யத்வம் த்வத்வாக்யேந சதுர்முக॥

இப்படி ஶாளக்ராம மூர்த்தியின் உற்பத்தி, வர்ணம், க்ஷேத்ரம், அதை ஆராதிப்பதால் ஏற்படும் நன்மை, தீமை, தகுதி, மூர்த்தி வேறுபாடு இவைகளைச் சொல்லவேண்டும் என்று கேட்கிறார். அதற்கு ப்ரஹ்மதேவன்—

**साधु साधु महाप्राज्ञ कृतः प्रश्नस्सुनिर्मलः।**
**मयोच्यते विधानेन शालग्रामस्य लक्षणम्॥**
**उत्पत्तिं च निदानं च वर्णं क्षेत्रं फलाफलम्।**
**मूर्तिभेदञ्च पूजायां योग्यत्वं मुनिपुङ्गव॥**

ஸாது ஸாது மஹாப்ராஜ்ஞ க்ருத: ப்ரஶ்நஸ்ஸுநிர்மல:।
மயோச்யதே விதாநேந ஶாலக்ராமஸ்ய லக்ஷணம்॥
உத்பத்திம் ச நிதாநம் ச வர்ணம் க்ஷேத்ரம் பலாபலம்।
மூர்த்திபேதஞ்ச பூஜாயாம் யோக்யத்வம் முநிபுங்கவ॥

என்று ஆரம்பித்து ஶாளக்ராமத்தின் உற்பத்தியைக் கூறுகிறார். அவந்தீ தேஶத்தில் ஹரிபர்வதத்தில் சக்ர வடிவத்தில் **ஶாளக்ராமம்** என்ற பெயரில் ஒரு க்ஷேத்ரம் இருந்தது. அதை நினைத்தாலே எல்லா பாவங்களும் தொலைந்துவிடும். அப்படிப்பட்ட

இடத்தில் கண்டகீ என்ற நதியும், பர்வதத்தின் அடிப் பகுதியில் **சக்ரதீர்த்தம்** என்ற ஒரு ஏரியும் இருந்தது—

**आसीदवन्ती देशेषु नाम्ना तु हरिपर्वतः।**
**शालग्राम इति क्षेत्रे हरिचक्रशिलामये॥**

ஆஸீதவந்தீ தேஶேஷு நாம்நா து ஹரிபர்வத:।
ஶாலக்ராம இதி க்ஷேத்ரே ஹரிசக்ரஶிலாமயே॥

**यस्य स्मरणमात्रेण सर्वपापक्षयो भवेत्।**
**तत्रैव गण्डक्याख्याता नदी पापप्रणाशिनी॥**

யஸ்ய ஸ்மரணமாத்ரேண ஸர்வபாபக்ஷயோ
பவேத்।
தத்ரைவ கண்டக்யாக்யாதா நதீ பாபப்ரணாஶிநீ॥

**यज्जलस्पृष्टमात्रेण विष्णुसायुज्यमश्नुते।**
**तस्मिन् पर्वतमूले तु चक्रतीर्थं महत् सरः॥**
யஜ்ஜலஸ்ப்ருஷ்டமாத்ரேண
விஷ்ணுஸாயுஜ்யமஶ்நுதே।
தஸ்மிந் பர்வதமூலே து சக்ரதீர்த்தம் மஹத் ஸர:॥

என்று சொல்லி அந்த தீர்த்தத்தை தொட்டாலே விஷ்ணுவை அடைவான். அந்த பர்வதத்தில் குளிர் காற்றில்லாத புண்யகாலங்களில் எல்லா லக்ஷணங் களும் கூடின ஶாளக்ராம சிலைகள் உருவாகின்றன.

**शीतवातविनिर्मुक्ते शैलगर्भे मुनीश्वर।**
**सर्वलक्षण सम्युक्ता शालग्रामशिला भवेत्॥**

ஶீதவாதவிநிர்முக்தே ஶைலகர்பே முநீஶ்வர।
ஸர்வலக்ஷண ஸம்யுக்தா ஶாலக்ராமஶிலா பவேத்॥

இப்படி உருவான சிலைகளில் பகவான் ஶ்ரீஹரி பல்லாயிர வருடங்களுக்குப் பிறகு வஜ்ரகீடம் என்ற பூச்சி உருவத்தை எடுத்துக்கொண்டு பலவித சக்ர ரூபமான த்வாரங்களை ஏற்படுத்துகிறார். அந்த வஜ்ரகீட பூச்சியானது மின்னல் போன்று ப்ரகாஶ முடையதாகவும், ரீங்காரம் செய்துகொண்டும் அந்த ஶிலாகர்ப்பத்தை அடையும் என்கிறார் ப்ரஹ்மதேவர்—

**हिरण्मयो महावीर्यः विद्युल्लेखा समप्रभः।**
**शालग्रामशिलागर्भमासाद्य कलनिस्वनः॥**
ஹிரண்மயோ மஹாவீர்ய: வித்யுல்லேகா ஸமப்ரப:।

ஶாலக்ராமஶிலாகர்பமாஸாத்ய கலநிஸ்வந:॥

இப்படி எம்பெருமான் விளையாட்டாக தன் முகத்தினாலேயே பலவிதமான அடையாளங்கள் உடைய சக்ரங்களை ஏற்படுத்துகிறான்–

**तत्रस्थ: चक्रचिह्नानि मुखेन कुरुते मुने।**
**नाना विधानि चक्राणि नानारूपाणि लीलया॥**

தத்ரஸ்த: சக்ரசிஹ்நாநி முகேந குருதே முநே।
நாநா விதாநி சக்ராணி நாநாரூபாணி லீலயா॥

பிறகு அங்கேயே பலகாலம் கழித்து ஶ்ரிய:பதியாக ஸாந்நித்யத்தை அடைகிறான்.

**अन्तर्दधाति तत्रैव बहुकालादनन्तरम्।**
**सान्निध्यं कुरुते तत्र साक्षाल्लक्ष्मीपतिस्तदा॥**
**तदाऽलोकनमात्रेण सर्वपापक्षयो भवेत्॥**

அந்தர்ததாதி தத்ரைவ பஹுகாலாதநந்தரம்।
ஸாந்நித்யம் குருதே தத்ர ஸாக்ஷால்லக்ஷ்மீபதிஸ்ததா॥
ததாऽலோகநமாத்ரேண ஸர்வபாபக்ஷயோ பவேத்॥

அப்படிப்பட்ட ஶாளக்ராம மூர்த்தியைப் பார்த்தாலே எல்லாவித பாவங்களும் அழிந்துவிடுமென்று மூர்த்தியின் உற்பத்தியை சொல்லிமுடிக்கிறார்.

இந்த ஶாளக்ராம சிலைகள் பல நிறங்களை உடையவை என்று வர்ணபேதங்களை வர்ணிக்கிறார்–

**श्वेता पीता तथा रक्ता कृष्णशाद्वलसन्निभा।**
**कपिला च तथा धूम्रा कलङ्का बहुवर्णिनी।**
**एवं विधैः तथा वर्णैः रूपैः नानाविधा शिला॥**

ஶ்வேதா பீதா ததா ரக்தா க்ருஷ்ணஶாத்வலஸந்நிபா।
கபிலா ச ததா தூம்ரா கலங்கா பஹுவர்ணிநீ॥
ஏவம் விதை: ததா வர்ணை: ரூபை: நாநாவிதா ஶிலா॥

வெண்மை, மஞ்சள், கருப்பு, சிவப்பு, ப்ரௌன், பச்சை, அதிவர்ணம், விவர்ணம், புகைவர்ணம், நிர்ணயிக்க முடியாத நிறம் ஸந்திக்தவர்ணம் இப்படி பலவகை நிறங்கள் உண்டு. இவற்றில் வெண்மை நிறம் வாஸுதேவ மூர்த்தி, மஞ்சள் ஹிரண்யகர்ப்பம், சிவப்பு ப்ரத்யும்னன், கருப்பு விஷ்ணுமூர்த்தி, பச்சை நிறம் ஶ்ரீமந்நாராயணன், கபில வர்ணம் நரஸிம்ஹமூர்த்தி, காயாம்பூ நிறம் வாமன மூர்த்தி

என்று நிறங்களின் அடிப்படையில் மூர்த்திகள் கணிக்கப்பட்டுள்ளன–

**क्षेत्रं तु वासुदेवस्य श्वेत वर्ण प्रचक्षते।**
**पीता हिरण्यगर्भा स्यात् रक्त प्रद्युम्नरूपिणी॥**
**कृष्णा तु विष्णु क्षेत्रं स्यात् शिला मुनिपुङ्गव ।**
**श्रीमन्नारायण क्षेत्रं हरिताङ्गं विदुर्बुधाः॥**
**कपिला नारसिंही स्यात् वामनी तु अतसी निभा॥**

க்ஷேத்ரம் து வாஸுதேவஸ்ய ஶ்வேத வர்ண ப்ரசக்ஷதே।
பீதா ஹிரண்யகர்பா ஸ்யாத் ரக்த ப்ரத்யும்நரூபிணீ॥
க்ருஷ்ணா து விஷ்ணு க்ஷேத்ரம் ஸ்யாத் ஶிலா முநிபுங்கவ।
ஶ்ரீமந்நாராயண க்ஷேத்ரம் ஹரிதாங்கம் விதுர்புதா:॥
கபிலா நாரஸிம்ஹீ ஸ்யாத் வாமநீ து அதஸீ நிபா॥

## நன்மை தீமை பலன்கள்

இவற்றில் எல்லா மூர்த்திகளும் ஆராதனத்திற்கு உகந்தவையல்ல. புகைவர்ண மூர்த்தியை ஸந்யாஸிகள் ஆராதிக்கவேண்டும் **श्रेष्ठायास्तु विशेषेण धूम्रा तु यति पूजने** (**ஶ்ரேஷ்டாயாஸ்து விஶேஷேண தூம்ரா து யதி பூஜநே**) மங்கின நிறத்தையுடைய மூர்த்தி அழிவை ஏற்படுத்தும் **मालिन्यं तु नाशहेतुर्भवति ।**

(**மாலிந்யம் து நாஶஹேதுர்பவதி**) பல நிறங்க ளுடைய மூர்த்திகளை ஆராதித்தால் அளவில்லாத பலன்களைக் கொடுக்கும் **बहुवर्णमिश्रितं तु अनन्तफलदायी भवति। (பஹுவர்ணமிஶ்ரிதம் து அநந்தபலதாயீ பவதி)** அதிகமான நிறத்தையுடைய **अतिवर्ण** மூர்த்தியை ஆராதித்தால் துக்கமும், நிறம் தெரியாத ஸந்தேஹ முடைய மூர்த்தியை ஆராதனம் செய்தால் தனக்கே அழிவு ஏற்படும் **अतिवर्णा दुःखदास्याद्विवर्णा कुलनाशिनी, सन्दिग्धवर्णा हन्त्री स्यादिति क्षेत्रफलं मुनेः (அதிவர்ணா துக்கதாஸ்யாத்விவர்ணா குலநாஶிநீ, ஸந்திக்தவர்ணா ஹந்த்ரீ ஸ்யாதிதி க்ஷேத்ரபலம் முநே:)** என்று கூறப்பட்டுள்ளது. மேலும் கபிலவர்ண ஶாளக்ராம மூர்த்தியை ஆராதிப்பதால் பத்நீக்கு அழிவும், கருப்பு நிற மூர்த்தியை ஆராதித்தால் ஐஶ்வர்ய ப்ராப்தியும் சொல்லப்பட்டுள்ளது **पत्नीघ्नी कपिला चैव नीला लक्ष्मी प्रदायिनी (பத்நீக்நீ கபிலா சைவ நீலா லக்ஷ்மீ ப்ரதாயிநீ)** என்று. சாம்பல் நிறமுடைய மூர்த்தி ஆரோக்யத்தையும், வளர்ச்சியையும், சிவப்பு நிறம் ராஜ்யத்தையும் கொடுக்கும் **पुष्टिता वृद्धिदा श्यामा रक्ता राज्यकरी तथा (புஷ்டிதா வ்ருத்திதா ஶ்யாமா ரக்தா ராஜ்யகரீ ததா)**

என்று சொல்லப்பட்டுள்ளது. இவற்றில் **श्वेतवर्णा मोक्षदा स्यात्** **(ஶ்வேதவர்ணா மோக்ஷதா ஸ்யாத்)** வெண்மை நிறமுடைய மூர்த்தியை ஆராதித்தால் மோக்ஷமானது கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

## மூர்த்தி லக்ஷணம்

ஶாளக்ராம சிலைகளிலுள்ள த்வாரங்களை நூலைக்கொண்டு (**सूत्रं)** அளவு பார்த்து மூர்த்திகளின் உத்தம, மத்யம, அதமங்களை தெரிந்துகொள்ளலாம். **सूत्रेण वेष्टव्येन्मध्यमं शालग्रामस्य बुद्धिमान्। (ஸூத்ரேண வேஷ்டவ்யேன்மத்யமம் ஶாலக்ராமஸ்ய புத்திமாந்)** எட்டு இஞ்ச் அளவுடைய ஶாளக்ராம மூர்த்தி உத்தமமானது, அதில் த்வாரத்திலிருந்து எட்டாவது பாகம் உத்தமம், மத்யமம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

## சாளக்ராம மூர்த்தி வக்த்ர பலன்கள்

ஶாளக்ராம மூர்த்தியினுடைய வக்த்ரம் (முகம்) பலவகைப்படும். ஊர்த்வ முகம், அதோ முகம், ஸம

முகம், பார்ஶ்வ முகம், வக்ர முகம், தீர்க்க முகம் போன்றவை. முக லக்ஷணத்திற்கு தகுந்தாற்போல் பலன்கள் சொல்லப்பட்டுள்ளன. அதோ முகம் கோரம் பயத்தை உண்டுபண்ணும், ஊர்த்வ முகம் ஊரை விட்டு வெளியேற்றிவிடும். ஸமமுகம் நன்மையைக் கொடுக்கும். பார்ஶ்வ முகம் நல்லதை அழித்துவிடும்—

**अधोवक्त्रं भीकरं च**
**ऊर्ध्वास्यं उच्चाटनक्रियम्।**
**समवक्त्रं विशिष्टं स्यात्**
**पार्श्वास्यं भाग्यहृद्भवेत्॥**

அதோவக்த்ரம் பீகரம் ச
ஊர்த்வாஸ்யம் உஞ்சாடநக்ரியம்।
ஸமவக்த்ரம் விஶிஷ்டம் ஸ்யாத்
பார்ஶ்வாஸ்யம் பாக்யஹ்ருத்பவேத்॥

வக்ர முகமுடைய மூர்த்தியை ஆராதித்தால் வ்யாதியும், நீண்டமுகமுடைய மூர்த்தியை ஆராதித்தால் ஸர்வநாஶமும் ஏற்படும்—

**वक्रास्यं व्याधिजनकं दीर्घास्यं सर्वभक्षकम्।**
**मूर्तिभेदं समाशोध्य पश्चाल्लक्षणमादिशेत्॥**

வக்ராஸ்யம் வ்யாதிஜநகம் தீர்காஸ்யம் ஸர்வபக்ஷகம்।
மூர்த்திபேதம் ஸமாஶோத்ய
பஶ்சால்லக்ஷணமாதிஶேத்॥

என்று கூறப்பட்டுள்ளது.

## தஶாவதார மூர்த்திகள்

### 1. மத்ஸ்யமூர்த்தி

மீன் போன்ற முகமும், சக்ர ரேகையும், ஸ்ரீவத்ஸ வடிவும், பிந்து மாலையும் இருந்தால் அது மத்ஸ்யமூர்த்தி ஆகும்.

**मत्स्याकृतिमुखाकारां मुखसन्दृश्य चक्रकाम्।**
**श्रीवत्सबिन्दुमालाढ्यां मत्स्यमूर्तिं शुभां विदुः॥**

மத்ஸ்யாக்ருதிமுகாகாராம் முகஸந்த்ருஶ்ய சக்ரகாம்।
ஸ்ரீவத்ஸபிந்துமாலாட்யாம் மத்ஸ்யமூர்த்தி ஶுபாம் விது:॥

### 2. கூர்மமூர்த்தி

வட்டவடிவமாகவும், கமலம் போன்று சக்ரவடிவமும் பலாச இலையில் தங்கம் சொட்டிய பிந்து போன்று ஸ்ரீயுடன் கூடின மூர்த்தி கூர்மமூர்த்தி

**वर्तुलः  कमलाकारः वनमालाब्ज चक्रवान्।**
**पलाशो हेमबिन्दु श्रीमहाकूर्मस्तु दुर्लभः॥**

வர்துல: கமலாகார: வநமாலாப்ஜ சக்ரவாந்।
பலாஶோ ஹேமபிந்து ஶ்ரீமஹாகூர்மஸ்து துர்லப:॥

## 3. ஶ்ரீவராஹ மூர்த்தி

நீண்டமுகம் பூமிவளையத்தோடு கூடின த்வாரத்தில் சக்ர ரேகையுள்ள மூர்த்தி ஶ்ரீவராஹமூர்த்தி

**दीर्घास्यं श्यामलाकारं पृथ्वीवलय  वेष्टितम्।**
**द्वारदेशे लसच्चक्रं वाराहं तद्विदुर्बुधाः॥**

தீர்காஸ்யம் ஶ்யாமலாகாரம் ப்ருத்வீவலய வேஷ்டிதம்।
த்வாரதேஶே லஸச்சக்ரம் வாராஹம் தத்விதுர்புதா:॥

## 4. ஶ்ரீ நாரஸிம்ஹ மூர்த்தி

நீண்டமுகம் மஞ்சளும் சிவப்பும் கலந்த நிறம் பெரிய சக்ரம், பெரிய வயிறு (உதரம்) உடையது நரஸிம்ஹ மூர்த்தி.

**दीर्घास्यः कपिलाकारो दीर्घचक्रो महोदरः।**
**नारसिंह इति ख्यातः योग्योमस्करि पूजने॥**

தீர்காஸ்ய: கபிலாகாரோ தீர்கசக்ரோ மஹோதர:।
நாரஸிம்ஹ இதி க்யாத: யோக்யோமஸ்கரி பூஜநே॥

## 5. ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ மூர்த்தி

இடது பாகத்தில் சக்ர அடையாளமும், கருப்பு நிற பொட்டும் இருக்கக் கூடியது லக்ஷ்மீ ந்ருஸிம்ஹமூர்த்தி. இந்த மூர்த்தியானது மோக்ஷத்தையும் முக்தியையும் கொடுக்கக் கூடியது.

**वामभागस्थ चक्राढ्य: कृष्णवर्णस्सबिन्दुक:।**
**लक्ष्मीनृसिंहाख्यात: भुक्तिमुक्तिफलप्रद:॥**

வாமபாகஸ்த சக்ராட்ய: க்ருஷ்ணவர்ணஸ்ஸபிந்துக:।
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹாக்யாத: புக்திமுக்திபலப்ரத:॥

## 6. வாமனமூர்த்தி

இந்த்ரநீலக்கல் வர்ணத்தையுடையது, வனமாலை போன்று ப்ரகாஶிக்கக் கூடியதும், சிறிய வடிவில், வட்டமாகவும் இருக்கக் கூடியது வாமானமூர்த்தி.

**इन्द्रनीलनिभाकारं वनमालाबुजोज्वलम्।**
**ह्रस्वं सुवर्तुलं चैव वामनं परिचक्षते॥**

இந்த்ரநீலநிபாகாரம் வநமாலாபுஜோஜ்வலம்।
ஹ்ருஸ்வம் ஸுவர்துலம் சைவ வாமநம் பரிசக்ஷதே॥

## 7. பரஶுராம மூர்த்தி

கோடாலி போன்று ரேகையுடையதும், அருகம்புல் போன்ற நிறமும் நீண்டும் தொப்புள் பகுதியில் சக்ர ரேகையுமுடையது பரஶுராமமூர்த்தி.

**लसत्परशुरेखाढ्यो दूर्वाश्यामस्तथोन्नत:।**
**नाभिदेशलसच्चक्र: रामस्स्याज्जमदग्निज:॥**

லஸத்பரஶுரேகாட்யோ தூர்வாஶ்யாமஸ்ததோந்நத:।
நாபிதேஶலஸச்சக்ர: ராமஸ்ஸ்யாஜ்ஜமதக்நிஜ:॥

## 8. ஶ்ரீராமமூர்த்தி

நீண்ட வில் அம்பு ரேகைகளுடன் கூடினதும், பிந்து அடையாளமுடையதும், நாபீதேஶத்தில் சக்ரரேகையும்,பல த்வாரங்களையுடையதும், பச்சை நிறம் கூடினதும் தாஶரதி மூர்த்தியாகும்.

**रेखाकारधनुर्बाणं स्थूलं दीर्घं सबिन्दुकम्।**
**नाभिचक्रं बहुच्छिद्रं श्यामं दाशरथिं विदु:॥**

ரேகாகாரதநுர்பாணம் ஸ்தூலம் தீர்க்கம் ஸபிந்துகம்।
நாபிசக்ரம் பஹுச்சித்ரம் ஶ்யாமம் தாஶரதிம் விது:॥

## 9. பலராமமூர்த்தி

ஏர் கலப்பை போன்ற ரேகையுடன் கூடியதும், முஸலாயுதம் ரேகையும், வெண்மையானதும், வனமாலை அடையாளமும், தேன்பிந்து போன்ற அடையாலமும், அழகானதும், ஸங்கர்ஷணாவதர அம்ஶமும்,எல்லா நன்மைகளையும் கொடுக்கக்கூடியது பலராம மூர்த்தி.

**हलरेखामुसलवान् शुक्लाभो वनदामवान्।**
**मधुबिन्दुधर: श्रीमान् रामस्संकर्षणश्शुभ:॥**

ஹலரேகாமுஸலவாந் ஶுக்லாபோ வநதாமவாந்।
மதுபிந்துதர: ஶ்ரீமாந் ராமஸ்ஸங்கர்ஷணஶ்ஶுப:॥

## 10. ஶ்ரீக்ருஷ்ணமூர்த்தி

பஞ்சாயுத வனமாலை ரேகைகளுடன் கூடினதும்,தாமரை அடையாளத்துடன் சிறியதான சக்ரத்துடன் இருக்கக் கூடியது ஶ்ரீகிருஷ்ணமூர்த்தி.

**रेखापञ्चायुधधरं वनमालाविभूषितम्।**
**अब्जचिह्नं सूक्ष्मचक्रं कृष्णमेनं प्रचक्षते॥**

ரேகாபஞ்சாயுததரம் வநமாலாவிபூஷிதம்।
அப்ஜசிஹ்நம் ஸூக்ஷ்மசக்ரம் க்ருஷ்ணமேநம் ப்ரசக்ஷதே॥

## 11. ஸ்ரீகல்கி மூர்த்தி

குதிரைவடிவமும், குந்தாயுத ரேகைகளுடன் கூடினதும், வெண்மை நிறமுடையதும், நீண்டமுகத்துடன் தோற்ற மளிக்கக் கூடியது ஸ்ரீகல்கிமூர்த்தி.

**हयरेखासमायुक्तः रेखाकुन्तायुधाकृतिः।**
**श्वेतवर्णो दीर्घमुखः कल्किरित्यभिधीयते॥**

ஹயரேகாஸமாயுக்த: ரேகாகுந்தாயுதாக்ருதி:।
ஶ்வேதவர்ணோ தீர்க்கமுக: கல்கிரித்யாபிதீயதே॥

இப்படி மேலும் பல மூர்த்திகளைப்பற்றி ப்ரஹ்மதேவர் நாரதபகவானுக்கு உபதேஶம் செய்கிறார்.

## ஶாளக்ராம தீர்த்தம்

எல்லாவித மஹிமைகளும் பொருந்திய, மஹாலக்ஷ்மி யுடன் ஶ்ரீமந்நாராயணன் எப்போதும் வாஸம்செய்து கொண்டிருக்கக்கூடிய ஶ்ரீஶாளக்ராம மூர்த்திக்கு திரு மஞ்சனம் செய்து அந்த ஶாளக்ராம மூர்த்தி தீர்த்தத்தைப் பருகுபவர்கள் எல்லா பாவங்களிலிருந்தும் விடுபட்டு ஶ்ரீமஹாவிஷ்ணுவை அடைகிறார்கள் என்று நரஸிம்ஹ புராணம் கூறுகிறது.

**शालग्रामशिलातोयं य: पिबेत् विष्णुसन्निधौ।**
**सर्वपापविनिर्मुक्त: विष्णुसायुज्यमाप्नुयात्॥**

ஶாலக்ராமஶிலாதோயம் ய: பிபேத் விஷ்ணுஸந்நிதௌ।
ஸர்வபாபவிநிர்முக்த: விஷ்ணுஸாயுஜ்யமாப்நுயாத்॥

## புனிதமான இடம் எது?

எம்பெருமானுடைய அடியார்களான ஶ்ரீவைஷ்ணவர்கள் எந்த இடத்தில் அரை நிமிஷமோ அல்லது ஒரு நிமிஷமோ இருந்தால் அதாவது அவர்களுடைய திருவடிகள் பட்டால்

அந்த இடம் புனிதமானது. அந்த தீர்த்தம் புண்ய தீர்த்தமாகும் என்று ஸம்ஹிதை கூறுகிறது..

**निमिषं निमिषार्थं वा यत्र तिष्ठन्ति वैष्णवा:।**
**तद्देशं मङ्गलं पुण्यं तत्तीर्थं तत्तपोवनम्॥**

நிமிஷம் நிமிஷார்த்தம் வா யத்ர திஷ்டந்தி வைஷ்ணவா:।
தத்தேஶம் மங்கலம் புண்யம் தத்தீர்த்தம் தத்தபோவநம்॥

அப்படிப்பட்ட மங்களத்தைக் கொடுக்கக்கூடிய இடம் தான் தவம் செய்யக்கூடிய சிறந்த இடமென்றும் கூறுகிறது.

சாளக்ராமக்ஷேத்ரத்தில் ஸ்ரீமதாண்டவன் பொன்னடி சாற்றி, பூர்வாசார்ய பாதுகைகளையும் எழுந்தருளப் பண்ணி ஆராதித்து அடியோங்களுக்கு சாளக்ராம மூர்த்தி தீர்த்தமும், பாதுகா தீர்த்தமும் ஸாதித்து ஒரே ஸமயத்தில் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸம்ருத்தியாக எழுந்தருளியதால் அவர்களுடைய திருவடிதூளியும் கிடைக்கும்படியாக ஸ்ரீமதாண்டவன் அநுக்ரஹம் செய்தது வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாதது.அடியோங்கள் தன்யர்களானோம்.


# சாளக்ராம க்ஷேத்ரத்தில் ஸ்வாமி தேஶிகன்

**नित्यं लक्ष्मीनयनरुचिरैः शोभिता शक्रनीलैः
सालग्रामक्षितिरिव शुभैः शार्ङ्गिणो रूपभेदैः।
साकेतादेः समधिकगुणां सम्पदं दर्शयन्ती
मुक्तिक्षेत्रं मुनिभिरखिलैर्गीयसे पादुके! त्वम्॥20.24॥**

நித்யம் லக்ஷ்மீநயநருசிரை: ஶோபிதா ஶக்ரநீலை:
ஸாலக்ராமக்ஷிதிரிவ ஶுபை: ஶார்ங்கிணோ ரூபபேதை:।
ஸாகேதாதே: ஸமதிககுணாம் ஸம்பதம் தர்ஶயந்தீ
முக்திக்ஷேத்ரம் முநிபிரகிலைர்கீயஸே பாதுகே! த்வம்॥20.24॥

ஸ்வாமி தேஶிகன் ஸ்ரீரங்கநாத பாதுகைகளை சாளக்ராம சிலைகளாக காட்சியளிப்பதாக வர்ணிக்கிறார். பாதுகைகள் மீதுள்ள இந்த்ரநீல மணிகள் மஹாலக்ஷ்மியின் கருநீல கண்கள்போல் ப்ரகாஶிக்கின்றன. அந்த ரூபபேதை: ஶாலக்ராம க்ஷிதிரிவ ஶோபிதா, சாளக்ராம சிலைகள் அழகாக ஒளிர்கின்றன. அப்படிப்பட்ட பாதுகையை முக்தி தரும் அயோத்யா, மதுரா, காசி, காஞ்சி, த்வாரகா, மாயா, அவந்திகா என்ற ஏழு க்ஷேத்ரங்களைவிட சிறந்த முக்திக்ஷேத்ரமாக முனிவர்கள் **मुक्तिक्षेत्रं**

**मुनिभिरखिलैः गीयसे पादुके त्वम्** வழிபடுகிறார்கள் என்று அநுபவிக்கிறார்.



ஸ்ரீமதாண்டவன் 250 படிகள் ஏறி சாளக்ராம எம்பெருமானை மங்களாஶாஸனம் செய்ய செல்லும் வழியில் ஒரு யாக சாலை மண்டபத்திற்கு எழுந் தருளியாயிற்று. அங்கே திருமங்கையாழ்வார், ஸ்ரீபாஷ்ய காரர் ஸ்ரீஆண்டாள், ஸ்ரீஸ்வாமி தேஶிகன், ஸ்ரீமணவாள மாமுனிகள், பெரிய பெரிய சாளக்ராம மூர்த்திகள் எல்லோரையும் மங்களாஶாஸனம் செய்துவிட்டு மேலே முக்திநாத் எம்பெருமானை மங்களாஶாஸனம் செய்து அங்கே அமைந்துள்ள யாகசாலை மண்டபத்தில் எழுந்தருளியுள்ள நம்மாழ்வார், ஆண்டாள், ஸ்ரீபாஷ்யகாரர், மணவாள மாமுனிகள் (மூலவர் விக்ரஹங்கள்) முதலியோரை மங்களாஶாஸனம் செய்து எழுந்தருளியாயிற்று.

மறுநாள் திருமங்கை ஆழ்வார், ஸ்ரீபாஷ்யகாரர் மங்களாஶாஸனம் செய்து முக்திநாத் க்ஷேத்ரத்தில், ஆழ்வார் ஆசார்யாள் ஸந்நிதியில் ஸ்வாமி ஸ்ரீவேதாந்த தேஶிகர் மூலவர் விக்ரஹம் ப்ரதிஷ்டை செய்துவித்தாயிற்று.

**ஆசார்யன் திருவடிகளே ஶரணம்**

